## முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
## முன்னிலை திருமதி. பி. கவிதா, பி.ஏ., எல்.எல்.பி.,
## முதன்மை சார்பு நீதிபதி

எ.ம.சா. 1 தேதி.18.06.2024

| MCOP. No. | 121/2015 | | |
|---|---|---|---|
| பெயர் | பார்வதி | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் 2ஆம் எதிர்மனுதாரர் அலுவலகத்தில் நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு ஆவணங்களாக 1ஆம் எதிர்மனுதாருக்கும் அவரது ஓட்டுநருக்கும் 06.07.2015 எங்கள் வழக்கறிஞர் மூலமாக அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் எ.ம.சா.ஆ.1, 1ஆம் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு சார்வு ஆகாமல் திருப்பப்பட்ட அஞ்சல்உறை எ.ம.சா.ஆ.2, அவரது ஓட்டுநர் அறிவிப்பை பெற மருத்து திருப்பிய அஞ்சல்உறை எ.ம.சா.ஆ.3, 1ஆம் எதிர்மனுதாருக்கும் அவரது ஓட்டுநருக்கும் 18.03.2024 எங்கள் வழக்கறிஞர் மூலமாக அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் எ.ம.சா.ஆ.4, 1ஆம் எதிர்மனுதாரர் அவரது ஓட்டுநர் அறிவிப்பை பெற்று கொண்டதற்காக ஒப்புதல் அட்டைகள் எ.ம.சா.ஆ.5, 6, மனுவை தள்ளுபடி செய்ய வேண்டி கொண்கிறேன்.

குறுக்கு விசாரணை

விபத்தில் பாதிக்கப்பட்ட மனுதாரர் எங்கள் நிறுவனத்தை பொறுத்து 3ஆம் நபர் என்றால் சரிதான். காப்பீடு விதிமுறைகள் என்பது காப்பீட்டாளருக்கும், உரிமையாளருக்கும் சம்பந்தப்பட்ட பிரச்சனை என்றால் சரிதான். மனுதாரர் சமூவேல் என்பவர் விபத்தினால் ஏற்பட்ட காயத்தினால் தொடர்ந்து சிகிச்சையில் இருந்து இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. மனுதாரர் 3ஆம் நபர் என்பதால் எங்கள் நிறுவனம் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல.